மகளிர் நீதிமன்றம், கோயமுத்தூர்
முன்னிலை - திரு எம் பி சுப்ரமணியன், பி.ஏ.பி.எல்,
அமர்வு நீதிபதி, மகளிர் நீதிமன்றம்
2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ம் நாள் வியாழக் கிழமை
மன்மத வருடம் சித்திரைத் திங்கள் 17 ம் நாள்
சிறப்பு ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் 19/2014
( பி 13 போத்தனூர் காவல் நிலையம் குற்ற எண் 284/2013)

| | | | |
|---|---|---|---|
| 1. | குற்ற முறையிடுபவர் | : | காவல் ஆய்வாளர், பி 13 போத்தனூர் காவல் நிலையம் குற்ற எண் 284/2013 |
| 2. | எதிரியின் பெயர் | : | கோபாலகிருஷ்ணன் (45) த/பெ முருகேசன் , கதவு எண் 16 ஏ ராஜமுத்தையா நகர், சுந்தராபுரம், போத்தனூர், கோவை |
| 3 | குற்றச்சாட்டு | : | இதச 294(b) ) மற்றும் 506(i) பிரிவுகளின் கீழ |
| 4. | எதிரியின் பதில் | : | இதச 294(b) ) மற்றும் 506(i) பிரிவுகளின் கீழ குற்றவாளிகள் இல்லை |
| 5. | நீதிபதியின் முடிவு | : | எதிரியை இதச 294(b) ) மற்றும் 506(i) பிரிவுகளின் கீழ குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்பட்டது. |
| 6. | தீர்ப்பு | : | எதிரியை குவிமுச 235(1) பிரிவின் கீழ விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டது. |

WEB COPY

இந்த வழக்கானது 27.4.2015 அன்று என் முன் இறுதி விசாரணைக்காக வந்ததில் அரசு தரப்பில் திருமதி ஆர் சரோஜினி, கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு ஜே. சிபின் சாமுவேல், அவர்கள் ஆஜராகியும் நடத்திய இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கின் எதிரியானவர் கோவை நகர் 16 ஏ முத்தையா தெரு, சுந்தராபுரம் என்ற விலாசத்தில் குடியிருந்து வந்து தினமும் குடித்து விட்டு வந்து அவரது மனைவியான ஜெயதேவி மற்றும் 14 வயதேயான மகன் விக்னேஷ் ஆகியோர்களை தகாத வார்த்தைகளால திட்டுவதை வழக்கமாக கொண்டிருந்து அதே போல் 4.3.2013 தேதியன்ற 8 ம் வகுப்பில் படித்து வரும் மகன் விக்னனேசை படிக்கவிடாமல் இடையூறு செய்து வந்தும் அந்த சிறுவனையும் அவரது தாயாரையும் ஆபாச வார்த்தைகளால் பேசியும், பள்ளியில் இருந்து வந்த கொண்டிருந்த எதிரின் மகளை வீட்டு வாசலில் நின்ற கொண்டிருந்த எதிரியானவர் உனக்காகத் தான் சொத்து எல்லாம் சேர்த்து வைக்கிறேன் உன்னைக் கொன்றால் தான் எனக்கு நிம்மதியாக இருக்க முடியும் என கொலை மிரட்டல் விடுத்துள்ளதாகவும் கூறி எதிரி மீது பி 13 போத்தனூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் இதச 294(b)மற்றும் 506(i) பிரிவுகளின் கீழ குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்.

2.2. இந்த வழக்கானது 28.4.2014 தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையானவுடன் அரசு தரப்பில் ஆஜரான அரசு தரப்பு வழக்கறிஞர்

3. இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டினை நிருபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் சாட்சிகள் பட்டியலில் 6 சாட்சிகள் காண்பிக்கப்பட்டு அவர்களில் 3 சாட்சிகள் அ.சா 1 முதல் 3 ஆக விசாரிக்கப்பட்டு அ. த. சா. ஆ.1 முதல் அ த சா ஆ 4 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்றுப்பொருள்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவோ சான்றாவணங்களோ, சான்றுப்பொருள்களோ குறியீடு செய்யப்படவோ இல்லை.

4.அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக அறியவரும் அரசு தரப்பு வழக்கானது -

அ சா 1 விக்னேஷ் கோவை சுந்தராபுரம் முத்தையா நகரில் வசித்து வருகிறார். எதிரி இவரது தகப்பனார்.அவரது தகப்பனாரான எதிரி இவரை படிக்க விடுவதில்லை. வீட்டில் சத்தமாக படிக்கக் கூடாது என திட்டி தொல்லை செய்து கொண்டேயிருப்பது வழக்கம். அ சா 1 ஐ வீட்டை விட்டு வெளியே போடா என்றும் உன்னை அடித்து கொன்று விடுவேன் என்றும் மிரட்டி குடிப்பதற்கு பணம் கேட்டு அடித்தும் வதைத்தும் வந்ததாலும் கெட்ட வார்த்தையால் திட்டியதாலும் 4..3.2013 தேதியன்ற காவல் நிலையத்தில் அ த சா ஆ 1 புகாரைக் கொடுத்துள்ளார். இவர் அரசு தரப்பில் பிறழ சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

WEB COPY

5. அ சா 2 ஜெயதேவி அ சா 1 இன் தாயாரும் எதிரியின் மனைவியுமானவர். அ சா 1 ன் சாட்சிய சங்கதிகளை ஒத்து சாட்சியம் அளித்து இவரும் அரசு தரப்பில் பிறழ சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

6. அ.சா 3 கிருஷ்ணலீலா போத்தனூர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக இருந்த போது 5.3.2013 தேதியன்று 24 வயதுடைய விக்னேஷ் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகாரை பெற்ற வழக்கு பதிவு செய்து அ த சா ஆ 2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். வழக்கில் விசாரணை மேற்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு அதசா 3 பார்வை மகசர் அத சா ஆ 4 வரைபடம் தயார் செய்து வழக்கில் விசாரணை முடித்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டது.

7. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் உள்ள எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சூழநிலைகளைப் பற்றி எதிரிகளுக்கு எடுத்துக் கூறி கு.வி.மு.ச. 313(1)(ஆ) பிரிவின் கீழ விசாரிக்கப்பட்டபோது எதிரிகள் சாட்சிகளின் சாட்சியங்களைப் பொய் என மறுத்தார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறினர். இத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

8. எதிரிகள் மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்குமுகமாக அரசு தரப்பில் 3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பு சான்றாவணங்கள் 1 முதல் 9 குறியீடு செய்யப்பட்டுள்ளன. வழக்காவணங்கள், சாட்சிய சான்றாவாணங்கள் இரு தரப்பு வாதம் ஆகியவற்றை உரிய பரிசீலனை

**பிரச்னை -**

9. கற்றரிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் தங்கள் வாதத்தை முன்னிலைப்படுத்தும்போது எதிரி மீதான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு சாட்சிகள் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

10. இதற்கு மாறாக கற்றரிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் அவர்கள் தங்கள் வாதத்தை முன் வைத்தபோது வழக்கில் புகார்தாரரும் வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவருமான அ சா 1 மற்றும் அவரது தாயாருமான அ சா 2 ஆகியோர் அரசு தரப்பில் பிழற சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளனர் என்றும், எதிரியின் மீதான குற்றச்சாட்டுகளை நிருபிக்கக் கூடிய வகையில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்து உத்தரவிட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

WEB COPY

11. இவ்வழக்கில் அ சா 1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள புகார் தாரர் மற்றும் அவரது தாயாரான அசா 2 இவர்களை தவிர வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள ஏனைய ஒரே சாட்சி காவல் துறை அதிகாரி இவரது சாட்சியம் எவ்வகையிலும் வழக்கின் படியான எதிரியின் குற்ற செய்கையை நிருபிக்கப் போது மானதாக இல்லை.

12.இவ்வழக்கின் எதிரியானவர் கோவை நகர் 16 ஏ முத்தையா தெரு, சுந்தராபுரம் என்ற விலாசத்தில் குடியிருந்து வந்து தினமும் குடித்து விட்டு வந்து அவரது மனைவியான ஜெயதேவி மற்றும் 14 வயதேயான மகன் விக்னேஷ் ஆகியோர்களை தகாத வார்த்தைகளால திட்டுவதை வழக்கமாக கொண்டிருந்து அதே போல் 4.3.2013 தேதியன்ற 8 ம் வகுப்பில் படித்து வரும் மகன் விக்னனேசை படிக்கவிடாமல் இடையூறு செய்து வந்தும் அந்த சிறுவனையும் அவரது தாயாரையும் ஆபாச வார்த்தைகளால் பேசியும், பள்ளியில் இருந்து வந்த கொண்டிருந்த எதிரின் மகளை வீட்டு வாசலில் நின்ற கொண்டிருந்த எதிரியானவர் உனக்காகத் தான் சொத்து எல்லாம் சேர்த்து வைக்கிறேன் உன்னைக் கொன்றால் தான் எனக்கு நிம்மதியாக இருக்க முடியும் என கொலை மிரட்டல் விடுத்துள்ளதாகவும் கூறி எதிரி மீது இதச 294 (b)மற்றும் 506(i) பிரிவுகளின் கீழ இவ்வழக்கின்படியான குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

13. ஆனால் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து மேற்படியான எதிரியின் குற்ற செய்கையை நிரூபிக்கப் போதுமான சங்கதிகள் எதுவும் இல்லாத சூழநிலையில் எதிரியின் மீதான வழக்கு குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரிகளை 294(b)மற்றும் 506(i) பிரிவின் கீழ குற்றவாளி இல்லை என தீர்மானித்து குவிமுச 235(1) பிரிவின் கீழ விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

14. எனவே முடிவில் எதிரி மீது வழக்கில் சுமத்தப்பட்டுள்ள இதச 294(b)மற்றும் 506(i)

15. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் எதுவும் இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

அமர்வு நீதிபதி
மகளிர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்

**அரசு தரப் பில் விசா ரிக் கப் பட்ட சாட் சி களி ன் பட்டிய ல்**

| | |
|---|---|
| அ.சா 1 | விக்னேஷ் |
| அ.சா 2 | ஜெயதேவி |
| அ.சா. 3 | கிருஷ்ணலீலா,உதவி ஆய்வாளர். |

WEB COPY

எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் - இல்லை

அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களின் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.த.சா.ஆ.1 | 5.3.2013 | புகார் |
| 2 | அ.த.சா.ஆ.2 | 5.3.2013 | முதல் தகவல் அறிக்கை |
| 3 | அ.த.சா.ஆ.3 | 5.3.2013 | பார்வை மகசர் |
| 4 | அ.த.சா.ஆ.4 | 5.3.2013 | மாதிரி வரைபடம் |

எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் - இல்லை

அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றுப்பொருள்கள் -

எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றுப்பொருள்கள் இல்லை

அமர்வு நீதிபதி
மகளிர் நீதிமன்றம்
கோயமுத்தூர்.

WEB COPY

அசல் /வரைவு /நகல் தீர்ப்புரை
Spl.CC19/2014
Date: 30.4.2015
மகளிர் நீதிமன்றம், கோவை